<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், விரைவு நீதிமன்றம்,</u>

<u>கும்பகோணம்.</u>

முன்னிலை – திருமதி.T. ஜெயஸ்ரீ, எம்.எல்,

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.

2026ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 30ஆம் நாள் விழாயக்கிழமை

திருவள்ளுவராண்டு 2056ஸ்ரீபராபவ வருடம் ஆடி திங்கள் 14ஆம் நாள்

**<u>அமர்வு வழக்கு எண். 323/2025</u>**

**(TNTJ17-000453-2025)**

(நாச்சியார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 29/2025)

( கும்பகோணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, முன்னுரை பதிவேட்டு வழக்கு எண். 41/2025–இல் பிறப்பிக்கப்பட்ட கமிட்டல் உத்தரவின் படி தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு12.09.2025 அன்று அமர்வு வழக்கு எண். 323/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் உத்தரவின் படி, இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப் பட்டுள்ளது.)

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்ற முறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர்,<br>நாச்சியார்கோயில் கிழக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண். 29/2025<br>ச/பி. 296(b) BNS Act, 2023 and 25(1A) Arms Act., |
| 2. | எதிரியின் பெயர் | : | பிரசாந்த் @ பப்லு, (வயது 29/2025),<br>த/பெ. பாஸ்கர், மாரியம்மன்கோயில் தெரு,<br>முருக்கங்குடி. |
| 3. | குற்றச்சாட்டுக்கள் | : | எதிரி மீது பிரிவுகள் 296(b) BNS Act, 2023 and 25(1A) Arms Act.,இன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப் பட்டுள்ளது. |
| 4. | எதிரியின் பதில் | : | எதிரி தான் குற்றவாளி அல்ல என தெரிவித்தார். |



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:35:53 +0530

| | | | |
|---|---|---|---|
| 5. | நீதிபதியின் முடிவு | : | குற்றவாளி அல்ல |
| 6. | தீர்ப்பு | : | முடிவில், எதிரி மீதான பிரிவுகள் 296(b) BNS Act, 2023 and 25(1A) Arms Act., இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், எதிரியை மேற்சொன்ன சட்டப்பிரிவுகள் 296(b) BNS Act, 2023 and 25(1A) Arms Act.,இன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்வு கண்டு எதிரியை 258(i) BNSS Act 2023 பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது. |

<table>
<tr><td rowspan="2">1.</td><td>எதிரி கைது செய்யப்பட்ட விவரம்</td><td>கைது நாள்</td><td colspan="2">பிணை நாள்</td><td>மொத்த நாட்கள்</td></tr>
<tr><td>ராகுல் (எ) ராஜசேகரன்</td><td>16.01.2025</td><td colspan="2">15.02.2025</td><td>31</td></tr>
<tr><td>2</td><td>புகார் கொடுத்த நாள்</td><td>--</td><td colspan="2">-</td><td>-</td></tr>
<tr><td>3</td><td>இறுதி குற்ற பத்திரிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த நாள்</td><td>06.08.2025</td><td colspan="2">-</td><td>-</td></tr>
<tr><td>4</td><td>குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள்</td><td>25.11.2025</td><td colspan="2">-</td><td>-</td></tr>
<tr><td>5</td><td>குற்றபல்வகை மனுக்கள்</td><td>தாக்கல் செய்த நாள்</td><td colspan="2">உத்தரவு நாள்</td><td>-</td></tr>
<tr><td>6</td><td>சாட்சிகளின் பெயர்கள்</td><td>முதல் விசாரணை நாள்</td><td>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை நாள்</td><td>அரசு தரப்பு குறுக்கு விசார</td><td>மீண்டும் அழைக்க ப்பட்ட நாள்</td></tr>
</table>



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:35:59 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ணை நாள் | |
| | அ.சா.1 திரு. கண்ணன் | 10.07.26 | 10.07.26 | - | – |
| | அ.சா.2 திரு. சுப்ரமணியன் | 10.07.26 | 10.07.26 | - | – |
| | அ.சா.3 திரு. வெங்கடேசன் | 21.07.26 | – | – | – |
| | அ.சா.4திரு. ராஜேஷ் | 27.07.26 | 27.07.26 | – | – |
| 7 | சட்டப் பிரிவு 351(1) (b) கு.வி.மு.ச வின் கீழான கேள்வி | 28.07.26 | – | | – |
| 8 | எதிரிக்கு எதிராக பிணைவிடா பிடி ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள் மற்றும் ரத்து செய்த விவரங்கள் | பெயர் | வழங்கிய நாள் | | இரத்து செய்த நாள் |
| | – | – | – | | –– |
| 9 | Grant of stay by Superior Courts and the results thereof. | – | – | | – |

இந்த வழக்கானது 29.07.2026 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்ததில் அரசு தரப்பில் திரு.கி.கார்த்திகேயன், அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ்.கென்னடிகண்ணன், அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த இரு தரப்பு



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:36:04 +0530

வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**தீர்ப்புரை**

**1) அரசுத் தரப்பு வழக்கு:**

கடந்த 16.01.2025 ஆம் தேதி 13.00 மணிக்கு முருக்கங்குடி கடைத்தெருவில் நின்றுக்கொண்டு கையில் உயிருக்கு ஆபத்தையும் அபாயத்தையும் விளைவிக்கக்கூடிய ஒரு பெரிய நீண்ட அருவாளை வைத்து சுழற்றிக்கொண்டு ரோட்டின் இரு பக்கமும் மாறி மாறி ஓடிக்கொண்டிருந்ததாகவும், குச்சிகாரி மவனுங்களா, தேவடியா மவனுங்களா எவனுக்காவது தில்லு இருந்தா வந்து என்னை தொட்டு பாருங்கடா, நான் பெரிய ரவுடிடா என் மேல பல கேசு எல்லாம் இருக்குடா என திட்டி கையில் வைத்திருந்த நீண்ட பெரிய வீச்ச அருவாளை தார் ரோட்டில் தீட்டி அதிலிருந்து தீப்பொறியை வரவழைத்ததாகவும், பொதுமக்களுக்கும், குழந்தைகளுக்கும் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியதாகவும், போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்தும், நீண்ட அருவாளை சுழற்றி காண்பித்து எவனாவது என் கிட்ட வந்தா உங்களை வெட்டி கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), BNS Act, 2023 and 25(1A) Arms Act., இன் கீழ் நாச்சியார்கோயில் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Digitally signed by JAYASHREE THOMAS Date: 2026.08.03 09:36:09 +0530

JAYASHREE THOMAS

**2)** இந்த வழக்கானது 12.09.2025 அன்று நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையானவுடன் எதிரிக்கு இவ்வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. வழக்கு நிலுவையில் இருக்கும் போது அரசு தரப்பில் ஆஜரான அரசுத் தரப்பு வழக்கறிஞர் மற்றும் இவ்வழக்கின் எதிரித் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆகியோர்களின் வாதுரைகளைக் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இவ்வழக்கின் எதிரி மீது குற்றச்சாட்டு வனையப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றத்திற்குத் தோன்றியமையால் எதிரி மீது சட்டப் பிரிவுகள் 296(b) BNS Act, 2023 and 25(1A) Arms Act., இன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு எடுத்துக் கூறி வினவிய போது, எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்தார்.

**3)** இவ்வழக்கின் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசுத் தரப்பு சாட்சிகள் பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ள 5 சாட்சிகளில், 4 சாட்சிகளை அ.சா.1 முதல் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருளாக அரிவாள் சா.பொ.1 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4)** அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக அறியவரும் அரசு தரப்பு வழக்கானது.



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:36:15 +0530

(i) அ.சா.1 சிறப்பு உதவி ஆய்வாளர் கண்ணன், தனது சாட்சியத்தில், தான் கடந்த 16/01/2025 ஆம் தேதி நாச்சியார்கோயில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது, சுமார் மதியம் 1 மணிக்கு ரோந்திற்காக ஆய்வாளர் திரு.ராஜேஷ், தன்னையும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் ஆகியோருடன் ஒரு காவலர் எங்கள் அலுவலக ஜீப்பை ஓட்ட முருக்கங்குடி பக்கமாக ரோந்து சென்றபோது, முருக்கங்குடி கடை தெருவில் வண்டிகள் நின்றுக்கொண்டிருந்தன, மக்கள் அலறியடித்து ஓடி வந்தார்கள். மதியம் 1.15 மணியளவில் கடை தெருவில் பார்த்த போது, பின்னர் ஆய்வாளர் பெயர் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரியான மாரியம்மன் கோயில் தெரு, பப்லு என்ற பிரசாத் த/பெ பாஸ்கர் என்பவர் கையில் அரிவாளுடன் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பெரிய அரிவாளை வைத்துக்கொண்டு தலைக்கு மேல் சுற்றிக்கொண்டு அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டு, அசிங்கமான வார்த்தைகளை பேசிக்கொண்டு அந்த அரிவாளை ரோட்டில் தீட்டி நெருப்புப்பொறியை உருவாக்கி, அதை பார்த்தப்பொது மக்களும் குழந்தைகளும் அலறியடித்து ஓடியதாகவும், கடைதெருவில் கடை உரிமையாளர்கள் கடையை சாத்திக்கொண்டு புறப்பட முற்பட்ட போது, ஆய்வாளர் எதிரி கைது செய்ததாகவும், ஆய்வாளருக்கு தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியனும் உதவியாக இருந்ததாகவும், பின்னர் ஆய்வாளரிடம் எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பகல் 1.30

மணிக்கு பொது மக்கள் யாரும் முன்வராத காரணத்தினால் தங்கள் இருவரையும் சாட்சியாக வைத்து தங்கள் முன்னிலையில் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரியிடம் பெற்றதாகவும், அதில் தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் மற்றும் எதிரியும் கையொப்பம் செய்ததாகவும், அதில் ஆய்வாளரும் கையொப்பம் செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 என்றும், அந்த ஒப்புதல் வாக்குமுலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியின் பேரில் எதிரியிடமிருந்து ஆய்வாளர் மேற்படி அரிவாளை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், பின்னர் 02.45 மணிக்கு எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெரிய அரிவாளை கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ–2 என்றும், அதில் தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியனும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் அரிவாள் தான் அன்று எதிரி கையில் வைத்திருந்தது, அந்த பெரிய அரிவாள் சா.பொ.1 என்றும், பின்னர் சம்பவயிடத்தில் இருந்து எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெரிய அரிவாள் மற்றும் எதிரியுடன் மாலை 3.30 மணிக்கு காவல் நிலையம் அனைவரும் வந்து, ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், ஆய்வாளர் குற்ற எண் 29/2025, ச/பி 296(பி) பி.என்எஸ் 25(1A) Arms Act இன் கீழ் வழக்கு பதிவு செய்த போது, ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், ஆய்வாளர் தன்னை



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:36:28 +0530

விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் தனது சாட்சியத்தில், கடந்த 16/01/2025 ஆம் தேதி நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது, 13.00 மணிக்கு நான் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் கண்ணன், ஆய்வாளர் ராஜேஷ் மற்றும் போலிஸ் ஜீப் டிரைவரான காவலர் ஒருவரும் சேர்ந்து குற்ற தடுப்பு நடவடிக்கையை கண்காணிக்க ரோந்து அலுவலாக முருக்கங்குடி சென்ற போது, முருக்கங்குடி கடை வீதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் போக்குவரத்து ஸ்தம்பித்தும் பொதுமக்கள் அலறியடித்தும் ஓடிக்கொண்டிருந்தார்கள் என்றும், தாங்கள் சென்று பார்த்த போது, பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பப்லு என்று பிரசாத் த/பெ பாஸ்கர், மாரியம்மன் கோயில் தெரு, முறுக்கங்குடி என்பவர் கையில் பெரிய அரிவாளை வைத்து சுழற்றிக்கொண்டு, இருபக்கமும் ஓடி கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டு, ரோட்டில் அரிவாளை தீட்டி தீப்பொறி வரவழைத்துக்கொண்டிருந்தவரை பார்த்து பொது மக்களும் குழந்தைகளும் பார்த்து அலறியடித்து ஓடிக்கொண்டிருந்ததாகதவும் அங்கிருந்த கடைகாரர்கள் கடையை முடிக்கொண்டிருந்ததாகவும், அங்கு பக்கத்தில் இருந்தவர்கள் தடுக்க முயற்சித்த போது, அவர்களை பார்த்து கிட்டே வந்தாள் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிக்கொண்டிருந்ததாகவும், அங்கு தாங்கள் சென்றதை பார்த்து



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:36:35 +0530

எதிரி பப்லு என்ற பிரசாத் தப்பிக்க முயற்சி செய்தவரை ஆய்வாளரும் தானும் அ.சா.1ம் சேர்ந்து சுற்றி வளைத்து பிடித்தோம் என்றும், எதிரியை ஆய்வாளர் கைது செய்து, எதிரி தானா முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்ததாகவும், சாட்சிகளான எனது முன்னிலையிலும் அ.சா.1இன் முன்னிலையிலும் பதிவு செய்து, அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், அ.சா.1ம், எதிரியிடமும் கையொப்பம் பெற்றதாகவும், ஆய்வாளரும் அதில் கையொப்பம் செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான் என்றும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் கையில் வைத்திருந்த அரிவாளை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சா.பொ.1யை கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், அ.சா.1 கண்ணனும் ஆய்வாளரும் கையொப்பம் செய்ததாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றும், பின்னர் 15.30 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 29/2025 ச/பி 296(பி) பிஎன்எஸ் 25(1A) Arms Act இன் கீழ் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய தாங்கள் அவருக்கு உதவியாக இருந்ததாகவும் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு. வெங்கடேசன், தனது சாட்சியத்தில், தான் முருக்கங்குடி கடை தெருவில் வசித்து, வியாபாரம் செய்து

வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் என்றும், சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு முன்பாக போலிசார் பார்வை மகஜர் தயார் செய்து, படம் வரைந்து தன்னிடம் கையெழுத்து கேட்டதாகவும், தானும் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்றும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ–3 என்றும், போலிசார் அன்று கையெழுத்து வாங்கினார்கள், எதற்கு கையெழுத்து வாங்குகிறீர்கள் என்று கேட்ட போது, வரைபடம் வரைந்ததற்கு சாட்சியாக கையெழுத்து கேட்டதாக சொன்னதாகவும் அதனால் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.4 திரு. ராஜேஷ் தனது சாட்சியத்தில், கடந்த 16/01/2025 ஆம் தேதி 13.00 மணிக்கு நாச்சியார்கோவில் காவல் நிலைய ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, ரோந்து அலுவலாக தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் கணணன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் ஆகியோருடன் குற்ற தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து முருக்கங்குடி கடைத்தெருவிற்கு சென்ற போது, ரோட்டின் இருபக்கமும் ரோட்டில் சென்ற வாகனங்கள் நின்ற நிலையிலும், கடை தெரு பக்கம் இருந்து பொது மக்கள் அலறியடித்துக்கொண்டு ரோட்டின் இருபக்கமும் ஓடிவருவதை பார்த்து, கடை தெருவிற்கு சென்று பார்த்த போது, ரோட்டின் நடுவே

பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து பப்லு என்ற பிரசாத் வயது 29 த/பெ பாஸ்கர் மாரியம்மன் கோயில் தெரு, முருக்கங்குடி என்பவர் கையில் உயிருக்கு ஆபத்தையும் அபாயத்தையும் விளைவிக்கக்கூடிய ஒரு பெரிய நீண்ட அருவாளை வைத்து சுழற்றிக்கொண்டு ரோட்டின் இருபக்கமும் மாறி மாறி ஓடிக்கொண்டு "குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்றும் எவனுக்காவது தில்லு இருந்தால் என்னை வந்து தொட்டு பாருடா நான் பெரிய ரவுடிடா என் மேல பல கேசு எல்லாம் உண்டு" என்று சொல்லி கையில் வைத்திருந்த பெரிய நீண்ட வீச்சரிவாளை தார்ரோட்டில் தீட்டியதாகவும், அந்த அரிவாளில் இருந்து வந்த தீப்பொறியை பார்த்து, பொது மக்களும், குழந்தைகளும் பயந்துக்கொண்டு ஓடியதாகவும், மக்களுக்கு பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியும், போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்தும் குற்ற செயலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவரை, பார்த்த கடைக்காரர்கள் எல்லாம் உயிருக்கு பயந்து, கடையின் கதவுகளை இழுத்து மூடியதாகவும், பக்கத்தில் நின்றவர்களை தடுக்க முற்பட்ட போது, மேற்கண்ட நபர் கையில் வைத்திருந்த நீண்ட அரிவாளை மீண்டும் சுழற்றி காண்பித்து, எவனாவது என் கிட்ட வந்தா உங்களை வெட்டி கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டில் செய்துக்கொண்டிருந்த நபர், நிலைய சரித்த பதிவேட்டில் உள்ளவர் என்பதாலும், அந்த நேரத்தில் அந்தயிடத்தில் நின்றுக்கொண்டு இருப்பதற்கான எந்த முகாந்திரமும் இல்லாததால், கையில் நீண்ட அரிவாளை வைத்துக்கொண்டு நின்றவரை, காவலர்கள் உதவியுடன் சுற்றிவளைத்து பிடித்தும், மேற்கண்ட நபரை

குற்ற காரணம் கூறி 13.15 மணிக்கு கைது செய்ததாகவும், பின்னர் எதிரி தாமாக முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சுப்ரமணியன் மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரி கையில் வைத்திருந்த அரிவாளை தாமாக முன்வந்து கொடுத்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 13.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட தடயத்துடன் 15.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது நாச்சியார்கோயில் காவல் நிலைய குற்ற எண் 29/2025 ச/பி 296(பி) பிஎன்எஸ் உ/இ 25(1A) Arms Actஇன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 என்றும், பின்னர் எதிரியை திரேக பரிசோதனை செய்து, காவல் அடைப்பிற்காக நிலைய பாரா வசம் ஒப்படைத்ததாகவும், அசல் முதல் தகவல் அறிக்கையுடன் கைப்பற்றுதல் மகஜர் நகலை இணைத்து கும்பகோணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2ற்கு அனுப்பியதாகவும், இதர நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை காவல் நிலையத்தில் வைத்ததாகவும், பின்னர் சம்பவயிடத்திற்கு 16.30 மணிக்கு சென்று, சம்பவயிடத்தை பார்வையிட்டு, சாட்சிகள் லூர்துராஜ், வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 என்றும், பின்னர்

பார்வை மகஜரில் சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேற்படி சம்பவம் உண்மையென தெரியவந்ததால், புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 23/01/2025 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5) இத்துடன் அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது. எதிரித் தரப்பில் எவ்வித சாட்சியங்களும் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

6) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகளைப் பற்றி எதிரிக்கு எடுத்துக் கூறி 351 (1) (b) BNSS 2023 Act-ன் கீழ் விசாரிக்கப்பட்ட போது, எதிரி அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் "பொய்" என மறுத்து, தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார். இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன.

7) இந்த வழக்கில் தீர்வுக்காணப்படவேண்டிய பொருண்மை யாதெனில், எதிரி மீது வனையப்பட்ட சட்டப் பிரிவுகள் 296(b) BNS Act, 2023 and 25(1A) Arms Act. இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:37:12 +0530

8) இந்த வழக்கில் எதிரி பொது மக்கள் முன்னிலையில் கொடும் ஆயுதமான அரிவாளை தலைக்கு மேல் தூக்கிக்கொண்டு, பொது மக்களை பார்த்து காமகுரோதமான தேவடியா மகனே, குச்சிகாரி மகனே என்று பேசி பொதுமக்களை பயமுறுத்து வகையில் கெட்ட வார்த்தையால் பேசி பொது மக்களை மிரட்டினார் என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை இந்நீதிமன்றம் ஆராய்கையில். அ.சா.1 சிறப்பு உதவி ஆய்வாளர், எதிரி அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு அசிங்கமான வார்த்தைகளால் பொது மக்களை பேசி அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், அ.சா.1யை ஒத்து எதிரி இருபக்கமும் ஓடி கெட்ட வார்த்தையால் திட்டி, அரிவாளை சுழற்றிக்கொண்டிருந்தார் என்று நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 ஆய்வாளர், தனது நீதிமன்ற சாட்சியத்தில், குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று திட்டிக்கொண்டு எதிரி அங்கும் இங்கும் ஓடி பொது மக்களை பயமுறுத்துக்கொண்டிருந்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகிய மூவரும் எதிரி கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தது சம்மந்தமாக மாறுப்பட்ட சாட்சிங்களை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளனர். அ.சா.1 எதிரி பொது மக்களை பார்த்து என்ன வார்த்தையால் பொதுமக்களை பார்த்து குறிப்பிட்டு பொது மக்களில் யாரை பார்த்து என்ன வார்த்தையால் திட்டினார் என்பது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. அ.சா.2 தனது

சாட்சியத்திலும், அ.சா.1 கூறியது போன்றே குறிப்பிட்டு பொது மக்களில் யாரை குறிப்பிட்டு திட்டிக்கொண்டிருந்தார் என்பது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2க்கு எதிராக அ.சா.4 குறிப்பிட்ட வார்த்தைகளை கூறி, எதிரி பொது மக்களை திட்டியதாக சாட்சியமளித்துள்ளார். உண்மையில் இதுபோன்று சம்பவம் நடந்திருந்தால், அங்கு பொது மக்களில் யாரேனும் அல்லது அந்த நேரத்தில் அந்த வழியாக வாகனத்தில் சென்று வந்துக்கொண்டிருந்த யாரேனும் கண்டிப்பாக புகார் கொடுத்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில், போலீசார் சொல்வது போல பொதுயிடத்தில், பொது மக்கள் முன்னிலையில் கொடும் ஆயுதமான ஆயுதச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடும் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும் ஆயுதத்தை வைத்து கொண்டு நடு ரோட்டில் அனைத்து பொது மக்கள் முன்னிலையில் சா.பொ.1அரிவாளை எடுத்து சுழற்றிக்கொண்டு, பொது மக்களை அபாயகரமாக தனது அடையாளத்தை கூறி மிரட்டிக்கொண்டு இருந்தார் என்பதையும் அவரை பிடிக்க போலிசாரை தவிர வேறு எவரும் முயற்சி ஏதும் செய்யவில்லை என்பதும், நம்பதகுந்ததாக காணப்படவில்லை என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளது. மேலும், இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2 ஆகியோரை யார் எந்த வாகனத்தில் சம்பவயிடத்திற்கு அழைத்து சென்றனர் என்பது குறித்தும், சம்பவயிடத்திலேயே ஒப்புதல் வாக்குமூலமமும், கைப்பற்றுதல் மகஜரும் தட்டச்சு செய்யப்பட்டதா, அவ்வாறு தட்டச்சு செய்யப்பட்டிருப்பின், தட்டச்சு யாரால் செய்யப்பட்டது, எவ்வாறு எங்கு

வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டு, சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டது, எங்கிருந்து எதிரியிடம் சான்று பொருள் கைப்பற்றப்பட்டது என்பது குறித்து ஏதும் தெளிவான விளக்கம் அ.சா.1, அ.சா.2, அ.சா.4 சாட்சிகளிடையே காணப்படவில்லை என்பதால், தட்டச்சு காவல் நிலையத்தில் வைத்து டைப் செய்யப்பட்டதா, அல்லது சம்பவயிடத்தில் காவல் நிலைய அதிகாரியால் டைப் செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டு, சாட்சிகளிடம் சம்பயிடத்திலேயே கையெழுத்து பெறப்பட்டதா என்பது குறித்து அ.சா.1, அ.சா.2, அ.சா.4 ஆகிய சாட்சிகளிடம் ஒருமித்த கருத்து காணப்படவில்லை என்பதும், டைப் செய்த சாட்சியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்பதும் ஆரம்ப நிலையிலிருந்தே (Void – ab– Initio) இந்த வழக்கு அரசு தரப்பு ஏற்கக்கூடிய வழக்காக காணப்படவில்லை என்பதே சாட்சிகள் சான்றாவணங்கள் மூலம் இந்த வழக்கில் தெளிவாக தெரியவருகிறது.

9) உண்மையில், அ.சா.1, அ.சா.2, அ.சா.4 ஆகிய மூவரும் சம்பவத்தை நேரில் பார்த்து, எதிரியை நேரில் கைது செய்து, எதிரியிடமிருந்து சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன தேதியில் ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் கைப்பற்றியது உண்மையாக இருந்திருந்தால், இந்த வழக்கில் காணப்படும் பால்வேறு முரண்பாடுகளை தவிர்த்திருக்க முடியும்.

JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:37:31 +0530

10) இந்த வழக்கில், அ.சா.1, அ.சா.2, அ.சா.4 ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் முரணான சாட்சிகளையும், சான்றாவணங்கள் தயார் செய்வதில் முரணான நேரங்களை குறிப்பிட்டும், அரசு தரப்பு வழக்கிற்கு குந்தகம் ஏற்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ–4 யை பார்வையிடுகையில், அந்த முதல் தகவல் அறிக்கையானது 16/01/2025 சம்பவ தேதியான அன்று 13.00 மணிக்கு நாச்சியார்கோயில் காவல் நிலைய ஆய்வாளர் அ.சா.4 ராஜேஷ் என்பவரால், சிறப்பு உதவி ஆய்வாளரான அ.சா.2 கொடுத்த தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அந்த முதல் தகவல் அறிக்கையில் அ.சா.4, அ.சா.2யை விசாரித்து, அவர் நேரிடியாக சென்று கலவரம் செய்துக்கொண்டிருந்த எதிரியை ரோட்டில் கைது செய்து, எதிரி கெட்ட வார்த்தையால் பேசி, அரிவாளை வைத்துக்கொண்டு சுழற்றிக்காட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்று கூறிய சங்கதி காணப்பட்டு, அ.சா.4இன் மூலம் முதல் தகவல் அறிக்கை 13.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அ.சா.2 சம்பவயிடத்தில் போலீஸ் சாட்சிகள் இருவர் முன்பு கைப்பற்றியதாக கூறும் கைப்பற்றுதல் மகஜரிலோ, 16.01.2025 ஆம் தேதி 14.45 மணிக்குத்தான் மேற்படி சா.பொ.1 அரிவாள் கைப்பற்றப்பட்டதாக கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2இல் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சம்பவயிடத்தில் போலிசார் எதிரியிடம் 16.01.2025 அன்று 13.30 மணிக்கு சம்பவயிடத்தில் போலீஸ் தரப்பு சாட்சிகள்

முன்னிலையில், எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளதாக காணப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியும், இரு போலீஸ் தரப்பு சாட்சிகளும் மற்றும் ஆய்வாளரும் கையொப்பமிட்டுள்ளதாக காணப்படுகிறது. ஆனால், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும் முன்னர் தான் ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடம் பெறப்பட்டதாக அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகியோர் சாட்சியமளித்துள்ளனர். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை 13.00 மணிக்கு பதியப்பட்டுள்ள நிலையில், இந்த முதல் தகவல் அறிக்கை பதியப்பட்ட 30நிமிடத்திற்கு பின்னர் தான் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தரப்பு கணினி தட்டச்சு செய்த அறிக்கையில் காணப்படுகிறது. மேற்படி சங்கதிகளின் படி அ.சா.ஆ.1 ஒப்புதல் வாக்குமூலத்தை பார்வையிடுகையில், அந்த ஒப்புதல் வாக்குமூலமானது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரத்திற்கு பின்னரே பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிக்கு சாதகமான சங்கதியாக காணப்படுகிறது. இது குறித்து, அ.சா.1, அ.சா.2 ஆகிய இருவரும் சம்பவயிடத்தில் தான், எதிரி கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து பகல் 01.30 மணிக்கு அ.சா.ஆ–1 ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்டதாக காணப்படுகிறது. ஆனால் ஒப்புதல் வாக்குமூலத்திலோ முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த நேரத்திற்கு பின்னிட்ட நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக காணப்படுகிறது. இது குறித்து சாட்சிகளுக்கிடையே பெரும் முரண்பாடு காணப்பட்டுள்ளது.

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:37:44 +0530

11) மேலும் இந்த வழக்கில், கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது காணப்படுகிறது என்ற நிலையில், சம்பவயிடமான பொது மக்கள் கூடியிருந்த பகுதியில், கணினி தட்டச்சு சம்பவயிடத்தில் வைத்து எங்கு செய்யப்பட்டது என்பது குறித்து எந்த சாட்சியும் தெளிவாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் கணினி தட்டச்சு செய்யப்பட்டு, பிரிண்ட் எடுத்து தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் தனது கையொப்பம் செய்ததாகத் தான் அ.சா.1 குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.1 ஒப்புதல் வாக்குமூலத்தை பார்வையிடுகையில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகிய இரண்டுமே முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த பின்னிட்டு தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்பதாலேயே ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த பின்னிட்ட நேரம் காணப்படுகிறது என்பது அரசு தரப்பில் இந்த வழக்கை ஆரம்ப நிலையில் இருந்தே இல்லா நிலையாகுகிறது என்பதை மறுக்க இயலாது. மேலும், இந்த வழக்கில் அ.சா.1யை குறுக்கு விசாரணை செய்த போது, இந்த வழக்கு தாக்கல் செய்த தேதி பொங்கல் சமயம் என்று சொன்னால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளதால், பொங்கல் சமயத்தில் இதுபோன்று பழைய குற்றவாளிகள் மீது புள்ளிவிவர கணக்கிற்காக வழக்கு போடுவது போலீசாரின் வழக்கம் என்று எதிரி தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வழக்கில் புகார் எந்த பொது மக்களும்

கொடுக்கவில்லை. தனிநபர் சாட்சிகளும் யாரும் விசாரிக்கப் படவில்லை. அ.சா.1 அங்கு சம்பவயிடத்தில் கடைகளில் உரிமையளார் பெயர் தெரியாது என்று கூறியுள்ளார். ஆனால், உண்மையில் சம்பவயிடத்திற்கு போலீசார் சாட்சியத்தில் கூறிய படி சென்றிருந்தால், கண்டிப்பாக போலீசாரிடம் கடைக்காரர்கள் எவரேனும் ஒருவராது இது குறித்து புகார் கொடுத்திருப்பார்கள். ஆனால், இந்த வழக்கில் எதிரி அரிவாளை எடுத்து சுழற்றியதாகவோ, கெட்ட வார்த்தையால் பேசியதாகவோ எந்த தனிநபர் சாட்சியும் புகார் கொடுக்கவில்லை என்பது அரசு தரப்பிற்கு குந்தமாக திசை திருப்புவதை மறுக்க இயலாது.

12) மேலும் இந்த வழக்கில் உண்மையில் இதுபோன்று சம்பவம் நடந்திருந்தால், போலீசார் எப்பொழுதும் கைவசம் வைத்திருந்த செல்வோனில் அது குறித்து வீடியோ எடுத்து, அதை சி.டி–யாக பதிவு செய்து, அந்த போட்டுக்களுடன் சி.டி–யுடம் சேர்த்து எதிரிக்கு எதிராக அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள். ஆனால் இந்த வழக்கில் அது குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

13) இந்த வழக்கானது பி.என்.எஸ் என்ற திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி பி.என்.எஸ்.எஸ் ஆக்டின் கீழ் திருத்தம் செய்யப்பட்ட போலீசாரின் புலன் விசாரணையின் போது ஆண்டிராய்டு கைபேசி மூலம் போட்டோ

எடுத்து, அதை சி.டியாக உருவாக்கி போலீசார் தாம் தாக்கல் செய்யும் வழக்கில் கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும் என்ற விதிமுறையானது போலீசாரால் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது.

14) இந்த வழக்கில் ஒவ்வொரு சாட்சிகளும் ஒவ்வொரு விதத்தில் சாட்சியமளித்துள்ளதாலும், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில், சொன்ன தேதியில் ஆவணங்கள் உருவாக்கப்படாமல், ஏற்கனவே காவல் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள வரலாற்று பதிவேடுகளில் காணப்படும் குற்றவாளிகளை கருத்திற்குகொண்டு அவர்களுக்காவே புள்ளிவிவர கணக்கிற்காக பொங்கல் நேரத்தில் குற்றம் நடப்பதை தடுக்கும் பொறுட்டு அவர்களின் மீது ஏதோ ஒரு பிரிவின் கீழ் போட்டு பொய் வழக்கு என்று எதிரி தரப்பில் வாதிடப்பட்டதன் மூலமும், சான்றாவணங்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

15) மேலும், இந்த வழக்கில் உண்மை தன்மையை அறிய இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் வேளையில் சா.பொ.1 அரிவாள் பார்வையிடுகையில், அந்தர அரிவாளாது கூர்மையற்ற முறையில், புதிதாக பயன்படுத்தப்படாத நிலையில் இருந்த அரிவாளாக காணப்படுகிறது. மேலும் இந்நீதிமன்றத்தில் இதுபோன்றே பழைய குற்றவாளிகளுக்கு எதிராக ஆயுதச்சட்டப்படி ஜாமீனில் வெளியே


JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:38:06 +0530

வராத குற்றம் செய்ததாக, இந்த நீதிமன்ற எல்லைக்குள் அமைந்துள்ள பல்வேறுப்பட்ட காவல் நிலையங்களில், பல்வேறுபட்ட வழக்குகள் இதே வழக்கெழுமூலத்தின் அடிப்படையில் புனையப்படும் பல்வேறுப்பட்ட அனைத்து வழக்குகளிலும் காவல் நிலைய குற்ற பதிவேடு எதிரிகளுக்கு எதிராக ஒரே வார்த்தைகளை கொண்டு எதிரி ஒரே மாதிரியாக நடு ரோட்டில் நின்றுக்கொண்டு பொது மக்களை அச்சுறுத்துவது போல் பல வழக்குகள் உள்ளன என்பதே இந்நீதிமன்றம் பார்வையிட்ட வகையில் தெரியவருகிறது.

16) மேற்படி சம்பவம் நடந்தயிடம் பொது மக்கள் அனைவரும் பயன்படுத்தக்கூடிய ஜனநடமாட்டம் நிறைந்த, போக்குவரத்து அதிகம் காணப்படும் பகுதி என்ற நிலையில், அங்குள்ள சி.சி.டி.வி கேமராவை ஆய்வு செய்து, மேற்படி எதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில், சொன்ன தேதியில் எதிரி ஆயுதத்தை கையில் வைத்துக்கொண்டு, தலைக்குமேல் வைத்து அரிவாளை சுழற்றி, அரிவாளை ரோட்டில் தேய்த்து தீப்பொறியை வரவழைத்ததும், குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்ற பேசியதும் குறித்து சி.சி.டி.வி கேமராக்களை கைப்பற்றி அதன் பதிவுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே மேற்படி சூழ்நிலைகளை கருத்திற்கொண்டும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை முரண்பாடுகளை கருத்திற்கு கொண்டும், ஆவணங்களில் உள்ள முரண்பாட்டினை கருத்திற்கு கொண்டும் மேற்படி சூழ்நிலையை இந்நீதிமன்றம் விவாதித்த வகையிலும்



JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:38:12 +0530

எதிரிக்கு எதிரான 296(பி) பிஎன்எஸ் மற்றும் 27(1ஏ) ஆயுதச்சட்டத்தின் கீழான பிரிவுகள் குற்றச்சாட்டுக்களும் இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் சந்தேகமற சாட்சிகள் மூலமாகவும், சான்றாவணங்கள் மூலமாகவும், சான்று பொருள் மூலமாகவும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய உத்தரவிடுப்படுகிறது.

**17)** மேலும், இந்த வழக்கில் பார்வை மகஜர் சாட்சி அ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் பார்வை மகஜரில் என்ன சங்கதிகள் உள்ளன என்பதுகூட அவருக்கு தெரியாமலேயே மேற்படி பார்வை மகஜரில் கையெழுத்து செய்துள்ளார். தனது வீட்டில் வைத்து போலீசார் வந்து தன்னிடம் கையொப்பம் செய்யதாக சாட்சியமளித்தள்ளார். போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். மேலும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியாக சேர்க்கப்பட்ட பட்டியல் சாட்சி இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்பதும் இவ்வழக்கில் அரசு தரப்பில் குந்தகம் ஏற்படுத்தும் என்பதை மறுக்க இயலாது.

**18)** இந்த வழக்கில் சம்பவமானது முதன்மையான போக்குவரத்து நெரிசல் கொண்ட பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அதிக பேர் இருந்தும் கூட ஒருவரையும், தனி நபர் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அந்த இடத்தின் அருகில் உள்ள கடைகள்



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:38:18 +0530

திறந்திருந்தும் கூட இவ்வழக்கில் போலிசார், மகசர் சாட்சிகளை தவிற வேறு எந்த தனிநபர் சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. மகசர் சாட்சிகளும் கூட இந்த வழக்கில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, மகசரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியவில்லை. போலிசார் கேட்டதற்காக கையெழுத்து போட்டதாக சாட்சியம் அளித்துள்ளதாலும், குற்றவியல் திருத்த சட்டமான BNSS அமலுக்கு வந்த பின்னரே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால், BNSS வழக்கில் போலிசாருக்கு கொடுக்கப்பட்ட வழிமுறைகளான Andriod Phoneலியே குற்றம் சம்பவத்தை காட்சிபடுத்தலம் மற்றும் பதிவு செய்யலாம் என்று கூறியுள்ள சங்கதிகளை போலிசார் தங்களுக்கே தெரிந்த சிறப்பு காரணங்களால் இந்த வழக்கில் பின்பற்றவில்லை.

19) மேலும் இந்த வழக்கில் போலிசார் காவல் நிலையத்தில் உள்ள பொது நாட்குறிப்பில் இந்த சம்பவம் குறித்து தாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றது சம்மந்தமாகவும், அதன் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர், சான்று பொருட்களை எதிரியிடம் கைப்பற்றிய சங்கதி குறித்து கண்டிபாக பதிவு செய்யப்பட்டிருக்கும், இந்த வழக்கில் பொது நாட்குறிப்போ, ஒவ்வொரு போலிசாரும் வைத்துக்கொள்ள வேண்டிய பாக்கெட் டைரியோ, வேறு எந்த ஆவணங்களோ சம்பவயிடத்திற்கு போலிசார் நேரில் அரசு வாகனத்தில் சென்றிருந்தால் அந்த வாகனத்தின் Log Book –ல் அன்றைய தேதியில் இந்த வழக்கில் எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றார்கள், எத்தனை மணிக்கு

எதிரியிடமிருந்து சான்று பொருளை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள் பின்னர் எத்தனை மணிக்கு எதிரியை கைது செய்து வாகனத்தில் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்பது குறித்து இந்த வழக்கில் நன்கு தெரிந்துகொள்ள முடியும். ஆனால் இந்த வழக்கில் காவல்துறையினர் மேற்படி மேலே கூறிய ஆவணங்கள் எதையும் தங்கள் தரப்பு சாட்சியமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதுடன், தங்களது Andriod Phone ல் சம்பவ காட்சியை பதிவு செய்யாததுடன், அருகில் உள்ள கடைகளில் உள்ள CCTV கேமராவை கைப்பற்றி அவைகளையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தவறிவிட்டனர் என்பதால், இந்த வழக்கில் முதல் தோற்ற வழக்கு (Prima Facie) எதுவும் தோன்றப்படவில்லை என்பதால், இந்த வழக்கில் எதிரி கெட்ட வார்த்தை பேசினார் என்பதாகவோ, அவர் சம்பவத்தின் போது கூர்மையான தடைசெய்யப்பட்ட ஆயுதமான அருவாளை ரோட்டில் வைத்து தீட்டினார் என்பதற்கோ முதற் தோற்ற வழக்கு எதுவும் தோன்றவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத வேண்டுமென்ற எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளதாக இந்நீதிமன்றம் காண்கிறது.

முடிவில், எதிரி மீதான பிரிவுகள் 296(b) BNS Act, 2023 and 25(1A)ஆயுதச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், எதிரியை மேற்சொன்ன சட்டப்பிரிவுகள் 296(b) BNS Act, 2023 and



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:38:32 +0530

25(1A)ஆயுதச்சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்வு கண்டு எதிரியை 258(i) BNSS Act 2023 பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இந்த வழக்கில் SCP.No. 78/2025இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுமார் 50 செமீ நீளமுள்ள பெரிய அரிவாள் ஒன்றை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவின்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30–ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:38:45 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்**

| | |
|---|---|
| அ.சா. 1 | திரு. கண்ணன் |
| அ.சா. 2 | திரு. சுப்ரமணியன் |
| அ.சா. 3 | திரு. வெங்கடேசன் |
| அ.சா. 4 | திரு. ராஜேஷ் |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் பட்டியல்.**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 16.01.2025 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 2 | அ.சா.ஆ.2 | 16.01.2025 | கைப்பற்றுதல் மகஜர் |
| 3 | அ.சா.ஆ.3 | 16.01.2025 | பார்வை மகஜர் |
| 4 | அ.சா.ஆ.4 | 16.01.2025 | முதல் தகவல் அறிக்கை |
| 5 | அ.சா.ஆ.5 | 16.01.2025 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருள்கள்**:-

| | | |
|---|---|---|
| 1. | சா.பொ.1 | சுமார் 50 செமீ நீளமுள்ள, அதில் சுமார் 2 செமீ இரும்பு பூணுடன் கூடிய 11 செமீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய பெரிய அரிவாள்-1 |

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்** - இல்லை.

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.03 09:38:51 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.

**குறிப்பு:**

1. விசாரணை காலத்தில் எதிரி நீதிமன்ற காவலில் இருந்தார்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.